## <u>சுருக்கம்</u>

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – ''கலைஞர் வீடு வழங்கும் திட்டம்'' – ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் கட்டப்படவுள்ள கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய வீடுகளுக்கு வழங்கப்படும் அலகுத் தொகையினை ரூ.60,000/–லிருந்து ரூ.75,000/– ஆக உயர்த்துதல் மற்றும் கூடுதலாக ரூ.450,00,00,000/–க்கு ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி1) துறை

அரசாணை (நிலை) எண். 87 நாள்: 20.08.2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 68, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14.06.2010.
2. அரசாணை (நிலை) எண். 74, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 16.07.2010.
3. அரசாணை (நிலை) எண். 81, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 05.08.2010.
4. அரசாணை (நிலை) எண். 85, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 12.08.2010.
5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 16263/2010/KVVT, நாள் 16.08.2010.

* * * * *

<u>ஆணை</u>:

மேலே பார்வை ஒன்று முதல் நான்கில் படிக்கப்பட்ட அரசாணைகளில் ''கலைஞர் வீடு வழங்கும் திட்டம்'' எனும் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்தவும், அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வாணையில் ஏனையவற்றிற்கிடையே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2010–11–ஆம் நிதி ஆண்டில், மூன்று இலட்சம் குடிசை வீடுகள், கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளாக, அலகுத் தொகை ரூ.60,000/– வீதம் கட்டித் தரப்படும் எனவும், இதற்காக, (2010–11–ஆம் நிதியாண்டில்) ரூ.1,800 கோடி நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2. இதனிடையே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 15.08.2010 அன்று ஆற்றிய சுதந்திர தின உரையில் ''கலைஞர் வீடு வழங்கும் திட்டம்'' குறித்து கீழ்கண்ட அறிவிப்பு செய்துள்ளார்.

> ''இந்தத் திட்டத்தின் கீழ் கட்டப்படும் ஒவ்வொரு கான்கிரீட் வீட்டிற்காகவும் அரசின் சார்பில் ரூபாய் 60 ஆயிரம் வழங்கப்படுமென்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ள போதிலும்; திருச்சி மாநகரில் நடைபெற்ற இதற்கான தொடக்க விழாவின்போது என்னிடம் தெரிவிக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று, மேலும் ரூபாய் 15 ஆயிரம் கூடுதலாக்கி, ஒவ்வொரு வீட்டிற்கும் ரூபாய் 75 ஆயிரம் வீதம் மானியமாக வழங்கிட இந்த அரசு முடிவு செய்துள்ளது''

(த.பி.பா)

**3.** மேலே பத்தி **2–**ல் காணப்படும் அறிவிப்பைத் தொடர்ந்து, மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் ''கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்'' கீழ் கட்டப்படும் கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளுக்கு வழங்கப்படும் அலகுத் தொகை ரூ.**60,000/–**லிருந்து ரூ.**75,000/–** என நிர்ணயம் செய்யுமாறும், இதற்காக இத்திட்டத்தின்கீழ் **2010–11–**ஆம் ஆண்டில் கூடுதலாக ரூ.**450** கோடி (ரூ.**15,000X3** இலட்சம் வீடுகள்) நிதி ஒதுக்கீடு செய்யுமாறும் கோரி, தக்க ஆணை வெளியிடுமாறு அரசினை வேண்டியுள்ளார்.

**4.** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்றுக் கொள்ளலாம் என்று முடிவு செய்து, பின்வருமாறு ஆணையிடுகிறது.

(i) கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள கான்கிரீட் மேற்கூரையுடன் கூடிய நிலையான வீடுகளுக்கு வழங்கப்படும் அலகுத் தொகையினை ரூ.**60,000/–** (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) திலிருந்து ரூ.**75,000/–** (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்)–ஆக உயர்த்தப்படுகிறது.

(ii) நடப்பு **(2010–11)** நிதியாண்டில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்திற்கு ரூ.**450,00,00,000/–** (ரூபாய் நானூற்று ஐம்பது கோடி மட்டும்) மேலே (i)ல் காணப்படும் மிகை செலவினத்தை மேற்கொள்ள ஏற்கனவே இத்திட்டத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.**1800,00,00,000/–** (ரூபாய் ஆயிரத்து எண்ணூறு கோடி மட்டும்) போக கூடுதலாக ஒப்பளிப்பு செய்யப்படுகிறது.

**(iii)** பார்வை ஒன்று முதல் நான்கு வரை படிக்கப்பட்ட அரசு ஆணையில் குறிப்பிடப்பட்ட வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

**5.** மேலே பத்தி **4 (i)–**ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| | | (ரூபாயில்) |
| (i) | **4216** – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – **03** – ஊரக வீட்டு வசதி **789** – ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் – JA சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் கலைஞர் வீட்டு வசதித் திட்டம்.<br>**16** – பெரும் பணிகள் (து.தொ.கு.**4216-03-789-JA-1607**) | 194,98,50,000/- |
| (ii) | **4216** – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு - **03** ஊரக வீட்டு வசதி **796** – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம் JA – பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டத்தின்கீழ் கலைஞர் வீட்டு வசதித் திட்டம்.<br>**16** – பெரும் பணிகள் (து.தொ.கு.**4216-03-796-JA-1602**) | 4,99,50,000/- |

(iii) **4216 – வீட்டு வசதி குறித்த மூலதனச் செலவு – 03 ஊரக வீட்டு வசதி 800 – ஏனைய செலவு – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் - II மாநிலத் திட்டம் JA – கலைஞர் வீட்டு வசதித் திட்டம்**
**16 – பெரும் பணிகள் (து.தொ.கு.4216-03-800-JA-1601)** **250,02,00,000**

--------------------

மொத்தம் **ரூ.450,00,00,000**

--------------------

(ரூபாய் நானூற்று ஐம்பது கோடி மட்டும்)

**6.** நடப்பு நிதியாண்டில் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கட்டப்படவுள்ள வீட்டின் அலகுத் தொகை ரூ.**60,000/–** லிருந்து ரூ**75,000/–** ஆக உயர்த்தப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள கூடுதல் செலவினமான ரூ.**450,00,00,000/–** (ரூபாய் நானூற்று ஐம்பது கோடி மட்டும்) **2010–11–**ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படும். இச்செலவினத்திற்கான நிதியொதுக்கீடு **2010–11–**ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். மேலும், மேற்கண்ட நிதியொதுக்கீட்டினை **2010–11–**ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளத் தேவையான வரவு செலவு திட்டக் கருத்துருக்களையும் மற்றும் துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்காக விளக்கக் குறிப்பினையும் அரசின் நிதித்துறைக்கு உரிய தருணத்தில் அனுப்ப தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**7.** இந்த ஆணை நிதித்துறையின் அ.சா.எண்.157/DS(B)/RD/2010, நாள் **19.08.2010**ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண். **764** (எழுநூற்று அறுபத்து நான்கு)

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை **-15.**
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்.
அனைத்து மாவட்ட ஊராட்சிகள்.
அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் மூலமாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை – **35.**
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.**1**) துறை, சென்னை–**9.**

**<u>நகல்</u>**

மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர், சென்னை – **9.**
மாண்புமிகு நிதியமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – **9.**
மாண்புமிகு துணை முதலமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – **9.**
நிதி (ஊவ/வரவு செலவு பொது I/II) துறை, சென்னை – **9.**

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்